மழை
போல
வாழ்வு


# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 JUNE

மலர்: 10 இதழ் : 9 ஜூன் 2017 விலை: ரூ. 5

## நீர் சுழற்சியை அன்றே சொன்ன குர்ஆன்!




● 'நீர் பார்க்கவில்லையா? அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கி, அதனை பூமியில் ஊற்றுகளில் ஓடச் செய்கிறான் அதன்பின், அதைக் கொண்டு வெவ்வேறு நிறங்களை உடைய பயிர்களை வெளிப்படுத்துகிறான். அப்பால், அது உலர்ந்து மஞ்சள் நிறமடைகிறதை நீர் பார்க்கிறீர் பின்னர் அதைக் கூளமாகச் செய்து விடுகிறான் – நிச்சயமாக இதில் அறிவுடையோருக்குப் படிப்பினை இருக்கிறது' (திருக்குர்ஆன் 39:21)

# படைத்தவனை நினைவூட்டும் மழை

● 24:43. (நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் மேகத்தை மெதுவாக இழுத்து, பின்னர் அவற்றை ஒன்றாக இணையச்செய்து, அதன் பின் அதை (ஒன்றின் மீது ஒன்று சேர்த்து) அடர்த்தியாக்குகிறான் அப்பால் அதன் நடுவேயிருந்து மழை வெளியாவதைப் பார்க்கிறீர் இன்னும் அவன் வானத்தில் மலைக(ளைப் போன்ற மேகக் கூட்டங்க)ளிலிருந்து பனிக்கட்டியையும் இறக்கி வைக்கின்றான் அதைத் தான் நாடியவர்கள் மீது விழும்படிச் செய்கிறான் - தான் நாடியவர்களை விட்டும் அதை விலக்கியும் விடுகிறான் - அதன் மின்னொளி பார்வைகளைப் பறிக்க நெருங்குகிறது.

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரேஇறைவன்' என்பது பொருள்)

## காற்று வரும் முன்னே மழை வரும் பின்னே


● 25:48. இன்னும், அவன்தான் தன்னுடைய கிருபை (மழை)க்கு முன்னே காற்றுகளை நன்மாராயமாக அனுப்பி வைக்கின்றான் மேலும், (நபியே!) நாமே வானத்திலிருந்து தூய்மையான நீரையும் இறக்கி வைக்கிறோம்.

## போக்கிவிடவும் நம்மால் முடியும்

● 23:18. மேலும், வானத்திலிருந்து நாம் திட்டமான அளவில் (மழை) நீரை இறக்கி, அப்பால் அதனைப் பூமியில் தங்க வைக்கிறோம் நிச்சயமாக அதனைப் போக்கிவிடவும் நாம் சக்தியுடையோம்.

## நன்றி கெடு செய்யலாகுமா?

● 27:60. அன்றியும், வானங்களையும் பூமியையும் படைத்து, உங்களுக்கு வானத்திலிருந்து மழையை இறக்கி வைப்பவன் யார்? பின்னர் அதைக் கொண்டு செழிப்பான தோட்டங்களை நாம் முளைக்கச் செய்கிறோம். அதன் மரங்களை முளைக்கச் செய்வது உங்களால் முடியாது. (அவ்வாறிருக்க) அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! ஆயினும் அவர்கள் (தம் கற்பனை தெய்வங்களை அல்லாஹ்வுக்கு) சமமாக்கும் மக்களாகவே இருக்கிறார்கள்.



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 JUNE

மலர்: 10 இதழ் : 9 ஜூன் 2017 விலை: ரூ. 5

## பொருளடக்கம்

மழை எனும் பரீட்சைக் கருவி-2
நீர்சுழற்சியும் குர்ஆனும் -4
சொல்லிக்கட்டப்படும் தானதர்மங்கள் வீண்! -5
மறுமை வாழ்வினை நினைவூட்டும் மழை -6
மழை நின்று போனால்..? -8
அண்ணல் நபிகளும் அருள்மழையும் -10
மழை போல வாழ்வு -11
கடனாளியாக மரணித்த மாமன்னர் -12
செல்வசெழிப்பில் நாடு
மன்னர் வீட்டில் வறுமை! -14
ஏழையாகவே வாழந்ததேனோ எங்கள் நபியே? -16
அரசியல்வாதிகளுக்கு ஓர் இலட்சிய முன்மாதிரி -18
தனது சொத்துக்களையும் அரசுடமையாக்கிய ஆட்சியாளர் -21
தலித் மக்களும் இடமாற்றமும் -22
நோன்பின் மாண்புகள் -24

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தீர்ப்பளிப்பவர் நன்கு ஆய்வு செய்து சரியான தீர்ப்பு வழங்கினால், அவருக்கு இரண்டு நன்மைகள் உண்டு. நன்கு ஆய்வு செய்து தீர்ப்பளித்தும் அதில் தவறு நிகழ்ந்துவிட்டால், அவருக்கு ஒரு நன்மை உண்டு (அறிவிப்பு: அம்ர் பின் ஆஸ் (ரலி) (புகாரி)

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# மழை எனும் பரீட்சைக் கருவி

நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வான்இன்று அமையாது ஒழுக்கு.

(நீர் இல்லாமல் உலக வாழ்க்கை இல்லை. மழை இல்லாமல் மனித ஒழுக்கம் இல்லை.)

நீர் மற்றும் மழையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் குறள் இது. தண்ணீர் இல்லாமல் நம் வாழ்க்கையை கற்பனை கூட செய்ய முடியாது . உலகத்தில் உள்ள நீரில் 3% மட்டுமே நல்ல தண்ணீர். இதை மட்டுமே நாம் குடிக்கப் பயன்படுத்த முடியும். இதிலும் 2% சதவீத தண்ணீர் பனிக்கட்டியாக உள்ளது. வெறும் 1% தண்ணீர் மட்டுமே பூமி முழுவதும் நாம் வாழும் பகுதியில் கிடைக்கிறது.

இந்த தற்காலிக வாழ்க்கை என்ற பரீட்சையில் முக்கிய பங்கு வகிப்பது மழை. மனிதனின் உணவு, நீர் போன்ற அனைத்து அடிப்படை தேவைகளுக்கும் ஆதாரமாக அமைவது மழை.

மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் பிராணிகள், தாவரங்கள் போன்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் உயிர் வாழவும் அடிப்படையாக இருப்பது இதுவே. விவசாயம், தொழிற்சாலைகள், மின்சார உற்பத்தி, வியாபாரம் என அனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்யும் சக்தி கொண்டது மழை. இவ்வுலக வாழ்க்கையில் மக்களின் செழிப்பும் வறட்சியும் மழையை இறைவன் பெய்விப்பதைப் பொறுத்தே அமைகிறது.

இந்த வாழ்க்கைப் பரீச்சையில் இறைவனின் அருட்கொடையாக அமைந்துள்ள அதே மழை சில வேளை தண்டனையாகவும் இறங்குகிறது. இறைவனின் உள்ளமையையும் வல்லமையையும் நினைவூட்டும் சான்றுகளாகவும், மறுமை வாழ்வின் சாத்தியக்கூறுகளை நினைவூட்டும் சான்றுகளாகவும் மழை நம் முன் விளங்குகிறது. இந்த மழை எனும் அருட்கொடைக்கு நன்றி செலுத்தும் முகமாக நம்மைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனை வணங்குவோர் நாளை மறுமையில் சொர்க்கம் செல்கிறார்கள். மனித வாழ்வின் அடிப்படை ஆதாரமான இந்த மழை அருட்கொடையை அனுபவித்துவிட்டு இறைவனுக்கு நன்றி செலுத்தாமல் புறக்கணிப்போரும் இறைவன் அல்லாத கற்பனை தெய்வங்களை வணங்குவோரும் மறுமையில் நரகம் செல்கிறார்கள்.

திருக்குர்ஆனில் இறைவன் நம்மை சிந்திக்கத் தூண்டுகிறான்:

- **56:68-70 அன்றியும், நீங்கள் குடிக்கும் நீரைக் கவனித்தீர்களா? மேகத்திலிருந்து அதை நீங்கள் இறக்கினீர்களா? அல்லது நாம் இறக்குகிறோமா? நாம் நாடினால், அதை உப்பாக ஆக்கியிருப்போம் (இவற்றுக்கெல்லாம்) நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா?**
- **2:22. அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பா கவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்தும் மழை பொழியச் செய்து**



அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான் (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்.

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)*

● 6:6. அவர்களுக்கு முன்னர் நாம் எத்தனையோ தலைமுறையினரை அழித்திருக்கிறோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? பூமியில் நாம் உங்களுக்கு செய்து தராத வசதிகளையெல்லாம் அவர்களுக்குச் செய்து கொடுத்திருந்தோம் அவர்கள் மீது நாம் வானம் தாரை தாரையாக மழை பெய்யுமாறு செய்து, அவர்களுக்குக் கீழே ஆறுகள் செழித்தோடும்படிச் செய்தோம் பிறகு அவர்களின் பாவங்களின் காரணத்தால் அவர்களை அழித்து விட்டோம் அவர்களுக்குப் பின் வேறு தலைமுறைகளை உண்டாக்கினோம்.

### இறையருளாக மழை

● 6:99. அவனே வானத்திலிருந்து மழையை இறக்கினான். அதைக் கொண்டு எல்லா வகையான புற்பூண்டுகளையும் நாம் வெளியாக்கினோம் அதிலிருந்து பச்சை(த் தழை)களை வெளிப்படுத்துகிறோம் அதிலிருந்து நாம் வித்துகளை அடர்த்தியான கதிர்களாக வெளிப்படுத்துகிறோம் பேரீத்த மரத்தின் பாளையிலிருந்து வளைந்து தொங்கும் பழக்குலைகளும் இருக்கின்றன் திராட்சைத் தோட்டங்களையும், (பார்வைக்கு) ஒன்று போலவும் (சுவைக்கு) வெவ்வேறாகவும் உள்ள மாதுளை, ஜைத்தூன் (ஒலிவம்) ஆகியவற்றையும் (நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம்) அவை (பூத்துக்) காய்ப்பதையும், பின்னர் கனிந்து பழமாவதையும் நீங்கள் உற்று நோக்குவீர்களாக - நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நிச்சயமாக இவற்றில் அத்தாட்சிகள் அமைந்துள்ளன.

### நல்லுணர்வு பெறுவீர

● 7:57. அவன்தான் தன்னுடைய அருள் (மாரிக்)கு முன், நற்செய்தியாக (குளிர்ந்த) காற்றுகளை அனுப்பிவைக்கிறான் அவை கனத்த மேகங்களைச் சுமக்கலானதும் நாம் அவற்றை இறந்து கிடக்கும் (வரண்ட) பூமியின் பக்கம் ஓட்டிச் சென்று, அதிலிருந்து மழையைப் பொழியச் செய்கின்றோம் பின்னர் அதைக் கொண்டு எல்லாவிதமான கனிவகை (விளைச்சல்)களையும் வெளிப்படுத்துகின்றோம் - இவ்வாறே நாம் இறந்தவர்களையும் எழுப்புவோம். (எனவே இவற்றை யெல்லாம் சிந்தித்து) நீங்கள் நல்லுணர்வு பெறுவீர்களாக.

● 7:58. (ஒரே விதமான மழையைக் கொண்டே) வளமான பூமி தன் இறைவன் கட்டளையைக் கொண்டு (செழுமையாகப்) பயிர் (பச்சை)களை வெளிப்படுத்துகிறது் ஆனால் கெட்ட களர் நிலம் சொற்பமான விளைச்சலையே வெளிப்படுத்துகிறது் நன்றி செலுத்தும் மக்களுக்கு இவ்வாறே நாம் வசனங்களை விவரிக்கின்றோம்.

● 20:53. “(அவனே) உங்களுக்காக இப்பூமியை ஒரு விரிப்பாக அமைத்தான் இன்னும் அதில் உங்களுக்குப் பாதைகளை இலேசாக்கினான் மேலும் வானத்திலிருந்து நீரையும் இறக்கினான் இம் மழை நீரைக் கொண்டு நாம் பல விதமான தாவரவர்க்கங்களை ஜோடி ஜோடியாக வெளிப்படுத்துகிறோம்” (என்று இறைவன் கூறுகிறான்).

● “ஓர் அடியான் நோயுற்றால் அல்லது பயணம் மேற்கொண்டால், (நோயின் காரணமாக அல்லது பிரயாணத்தின் காரணமாக அமல் செய்ய முடியாததால்) அவர் ஆரோக்கிய நிலையில் அல்லது வீட்டிலிருக்கும் போது செய்த நற்செயல்களின் கூலி அவருக்கு எழுதப்படுகிறது” என்று நபி (ஸல்) அவர்கள் அறிவிப்பு: அபூமூஸா (ரலி) (புகாரி)

# நீர்சுழற்சியும் குர்ஆனும்

**● ''நீர் பார்க்கவில்லையா? அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கி, அதனை பூமியில் ஊற்றுகளில் ஓடச் செய்கிறான் அதன்பின், அதைக் கொண்டு வெவ்வேறு நிறங்களை உடைய பயிர்களை வெளிப்படுத்துகிறான். அப்பால், அது உலர்ந்து மஞ்சள் நிறமடைகிறதை நீர் பார்க்கிறீர் பின்னர் அதைக் கூளமாகச் செய்து விடுகிறான் - நிச்சயமாக இதில் அறிவுடையோருக்குப் படிப்பினை இருக்கிறது'' (திருக்குர்ஆன் 39:21)**

**● ''மேலும், வானத்திலிருந்து நாம் திட்டமான அளவில் (மழை) நீரை இறக்கி, அப்பால் அதனைப் பூமியில் தங்க வைக்கிறோம், நிச்சயமாக அதனைப் போக்கிவிடவும் நாம் சக்தியுடையோம்'' (அல் குஆன் 23:18)**

நாம் பள்ளிப்பாட புத்தகங்களில் நீரின் சுழற்சி (principle of Water cycle) என்பதைப் பற்றி படித்திருக்கின்றோம். ஆறுகள் மற்றும் கடல்களிலிருந்து நீர் ஆவியாகி, பின்னர் அந்த ஆவிகள் மேகங்களாக மாறி அந்த மேகங்கள் குளிர்ந்து மழையாக பெய்கின்றது என்றும், அந்த மழை நீரே பூமிக்குள் ஊடுருவிச் சென்று நீர் ஊற்றுக்களாக ஓடுகின்றது என்றும், பூமியின் மேற்பரப்பிலுள்ள நீர் ஆறுகள் வழியாக கடலை அடைகிறது என்றும், பின்னர் மீண்டும் ஆவியாகி, மேகங்களாகி மழை பெய்கின்றது என்றும் படித்திருக்கின்றோம். இந்த வகையான நீரின் சுழற்சிக்கு ஆங்கிலத்தில் water cycle என்று பெயர்.

இதைப் பற்றி "The Bible, The Quran and Science" என்ற உலகப்புகழ் பெற்ற ஆய்வு நூலை (தமிழ் மொழிபெயர்ப்பு புத்தகம் விஞ்ஞான ஒளியில் பைபிளும் குஆனும்) எழுதிய டாக்டர் மாரிஸ் புகைல் (Dr. Maurice Bucaille) என்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அறிவியல் மேதை, The quran and Modern Science (குர்ஆனும் நவீன விஞ்ஞானமும்) என்ற தமது நூலில் பின்வருமாறு கூறுகிறார்:-

Water cycle என்பது இன்று நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. குர்ஆனில் கூறப்படுகின்ற water cycle பற்றிய வசனங்கள் இன்று நம்மிடையே உள்ள நவீன அறிவியலை ஒத்திருக்கின்றது. நாம் குர்ஆன் இறக்கி அருளப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களிடையே இருந்து வந்த நம்பிக்கைகளைப் பார்ப்போமேயானால், வெறும் மூட நம்பிக்கைகளையும், தத்துவங்களையுமே நீரியல் பற்றிய உண்மை என்று நம்பி வந்தனர். உதாரணமாக பின்வரும் குர்ஆன் வசனத்தை ஆராய்வோம்.

**● நீர் பார்க்கவில்லையா? அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கி, அதனை பூமியில் ஊற்றுகளில் ஓடச் செய்கிறான் (அல் குஆன் 39:21)**

இந்த வசனத்திலுள்ள அறிவியல் உண்மைகள் இன்று நமக்கு சாதாரணமாக தெரிகிறது என்றாலும் இந்த உண்மைகள் நீண்ட நாட்களாக குறிப்பாக குர்ஆன் இறக்கியருளப்பட்ட காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை நாம் மறுக்க முடியாது. இந்த றயவநச உலஉடந கோட்பாட்டை Bernard Palissy என்பவர் 16 ஆம் நூற்றாண்டில் தான் முதன்முறையாக கண்டுபிடித்தார். 16 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள், பிளேட்டோ என்ற தத்துவ வாதியின் கருத்துக்களான கடல் நீர் காற்றின் அழுத்தத்தினால் பூமியினுள் ஊடுருவிச் சென்று பின்னர் ஊற்றுக்களாக மாறுகிறது என்று நம்பி வந்தனர்.

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த Descartes போன்ற சிறந்த சிந்தனையாளர்கள் கூட மேற்கூறிய சித்தாந்தத்தையே உண்மை என நம்பி வந்தனர்.

*19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்த மக்கள் கூட தத்துவ மேதை என போற்றப்படுகின்ற அஸ்டாட்டிலின் கோட்பாடான மலைக்குகைகளில் பெரும் பனிக்கட்டிகள் குளிர்ந்து நீராகி, அவை பெரிய ஏரிகளாக மாறி அவைகளே பூமிக்கடியில் உள்ள ஊற்றுக்களில் நீர் ஓடுவதற்குரிய ஆதாரமாக இருக்கிறது என்று நம்பி வந்தனர்.*

*ஆனால் இன்றுள்ள அறிவியல் வளர்ச்சியோ, வானிலிருந்து பெய்த மழை நீரே பூமிக்குள் ஊடுருவிச் சென்று அவைகள் நீர் ஊற்றுக்களாக ஓடுகின்றது என்பதைக் கூறுகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் கண்டுபடிக்கப்பட்ட இந்த நவீன அறிவியல் கருத்தை குர்ஆன் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டது என டாக்டர் மாரிஸ் புகைல் கூறினார்.*

*இதுபோல் இன்னும் பல திருமறையின் வசனங்களை ஆய்வு செய்த டாக்டர் மாரிஸ் புகைல், தமது நூலின் இறுதியில் பின்வருமாறு கூறுகிறார். "நாம் எடுத்து விளக்கிய அறிவியல் உண்மைகளிலிருந்து, மனித முயற்சிகளுக்கு சவாலாக இருந்துக் கொண்டிருக்கும் இந்த குர்ஆன் இறைவனால் அருளப்பட்டது என்ற முடிவைத் தவிர வேறெதுவுக்கும் நம்மால் வரமுடியவில்லை".*

● **"நிச்சயமாக இதில் அறிவுடையோருக்குப் படிப்பினை இருக்கிறது" (அல் குஆன் 39:21)**

# சொல்லிக்கட்டப்படும் தானதர்மங்கள் வீண்!

*தூய்மையான எண்ணத்தோடு செய்யப்படும் தானதர்மங்களே இறைவனிடம் ஏற்புடையவை. இறைநம்பிக்கை கொண்டார்களே ஆனாலும் அவர்கள் செய்யும் தானதர்மங்களை ஷைத்தானின் தூண்டுதலின் பேரில் சொல்லிக் காட்டவோ அல்லது முகஸ்துதிக்காகவோ செய்வார்களேயானால் அவை இறைவனிடம் எந்த நற்கூலியையும் பெற்றுத் தராது என்பதை கீழ்கண்ட இறைவசனங்கள் மூலம் இறைவன் நமக்கு எச்சரிக்கிறான்:*

● **2:264. நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப்போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் ஸதக்காவை (தான தர்மங்களைப்) பாழாக்கி விடாதீர்கள் அ(ப்படிச் செய்ப)வனுக்கு உவமையாவது: ஒரு வழுக்குப் பாறையாகும் அதன் மேல் சிறிது மண் படிந்துள்ளது் அதன் மீது பெருமழை பெய்து (அதிலிருந்த சிறிது மண்ணையும் கழுவித்) துடைத்து விட்டது் இவ்வாறே அவர்கள் செய்த -(தானத்)திலிருந்து யாதொரு பலனையும் அடைய மாட்டார்கள் இன்னும், அல்லாஹ் சத்தியத்தை ஏற்க மறுக்கும் மக்களை நேர் வழியில் செலுத்துவதில்லை.**

● **2:265. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவும், தங்கள் ஆத்மாக்களை உறுதியாக்கிக் கொள்ளவும், யார் தங்கள் செல்வங்களைச் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு உவமையாவது: உயரமான (வளமுள்ள) பூமியில் ஒரு தோட்டம் இருக்கிறது அதன் மேல் பெரு மழை பெய்கிறது அப்பொழுது அதன் விளைச்சல் இரட்டிப்பாகிறது இன்னும், அதன் மீது அப்படிப் பெருமழை பெய்யாவிட்டாலும் பொடி மழையே அதற்குப் போதுமானது அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் பார்க்கின்றவனாக இருக்கின்றான்.**


# மறுமை வாழ்வினை நினைவூட்டும் மழை

இந்த உலக வாழ்க்கையின் நோக்கம் என்ன? என்ற கேள்விக்கு நாத்திகர்களிடம் இருந்து பதில் கிடைக்காது. ஆனால் இறைவனின் இறுதிவேதம் தெளிவான பதிலைத் தருகிறது. தற்காலிகமான இவ்வுலக வாழ்வின் நோக்கமே மனிதனைப் பரீட்சிப்பதற்காக வேண்டிதான் என்பதை பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து உணரும் வண்ணம் திருக்குர்ஆன் தனது வாதங்களை முன்வைக்கிறது.

அதாவது இந்த உலகம் ஒருநாள் முழுமையாக அழிக்கப்படும். அதைத் தொடர்ந்து மீண்டும் இறைவன் புறத்திலிருந்து கட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் மீண்டும் விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். அன்று இறைவனுக்கு கீழ்படிந்து வாழ்ந்தோருக்கு சொர்க்கமும் கீழ்படியாதோருக்கு நரகமும் விதிக்கப்படும். அதுதான் நமது நிரந்தர இருப்பிடமாக இருக்கும்

இவற்றை நம் புலன்களால் அறிய முடியாத நிலையில் நாம் உள்ளோம். ஆனால் நம் புலன்களுக்கு எட்டவில்லை என்ற காரணத்துக்காக அவற்றை மறுத்து விட முடியுமா? அவ்வாறு மறுப்பது என்பது பகுத்தறிவுக்கு இழுக்கு அல்லவா? புலன்களுக்கு எட்டும் தகவல்களை (sensible data) சேகரித்துக் கொண்டு எட்டாதவற்றை (insensible) ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்வதைத்தான் பகுத்தறிவு என்கிறோம். நம்மை மீறிய மீறிய ஒரு சக்திக்கு உட்பட்டுதான் நாம் இக்கட்டங்களைக் கடந்து வருகிறோம் என்று உணர்ந்த பிறகும் எப்படி இவற்றை அப்பட்டமாக மறுக்க முடியும்? மேலும் இவற்றை மறுப்பதும் அலட்சியம் செய்வதும் நாளை நரகத்திற்கு இட்டுச்செல்லும் என்று கூறப்படும்போது இதுபற்றி ஆராயாமல் இருக்க முடியுமா?

அவ்வாறு பகுத்தறிவால் ஆராயும்போது மழையின் அன்றாட செயல்பாடுகளை ஆராய்வோர் மறுமை வாழ்வு என்பது சாத்தியமே என்பதை அறிவார்கள்:



- **22:63. நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து (மழை) நீரை இறக்குகிறான் அதனால் பூமி பசுமையாகி விடுகிறது என்பதை நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் கிருபையுடையவன் நன்கறிந்தவன்.**
- **41:39. பூமியானது காய்ந்து வரண்டு கிடப்பதை நீர் பார்ப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் நின்றுள்ளதாகும் அதன் மீது நாம் மழையை பொழியச் செய்தால், அது (புற்பூண்டுகள் கிளம்பிப்) பசுமையாக வளர்கிறது (இவ்வாறு மரித்த பூமியை) உயிர்ப்பித்தவனே, நிச்சயமாக இறந்தவர்களையும் திட்டமாக உயிர்ப்பிக்கிறவன் நிச்சயமாக அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றல் உடையவன்.**
- **30:24. அச்சமும், ஆசையும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும் பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து, அதைக் கொண்டு பூமியை - அது (வரண்டு) இறந்த பின்னர் உயிர்ப்பிப்பதும்**

அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன் நிச்சயமாக அதில் சிந்தித்துணரும் சமூகத்திற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.

- 41:39. பூமியானது காய்ந்து வரண்டு கிடப்பதை நீர் பார்ப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் நின்றுள்ளதாகும் அதன் மீது நாம் மழையை பொழியச் செய்தால், அது (புற் பூண்டுகள் கிளம்பிப்) பசுமையாக வளர்கிறத் (இவ்வாறு மரித்த பூமியை) உயிர்ப்பித்தவனே, நிச்சயமாக இறந்தவர்களையும் திட்டமாக உயிர்ப்பிக்கிறவன் நிச்சயமாக அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றல் உடையவன்.
- 43:11. அவன்தான் வானத்திலிருந்து மழையை அளவோடு இறக்கி வைக்கிறான். பின்னர், அதனைக் கொண்டு இறந்து கிடந்த பூமியை நாம் தாம் உயிர்ப்பிக்கின்றோம். இவ்வாறே நீங்களும் (மரணத்திற்கு பின் உயிர்ப்படுத்தப் பெற்று) வெளிப்படுத்தப்படுவீர்கள்.
- 22:5. மனிதர்களே! (இறுதித் தீர்ப்புக்காக நீங்கள்) மீண்டும் எழுப்பப்படுவது பற்றி சந்தேகத்தில் இருந்தீர்களானால், (அறிந்து கொள்ளுங்கள்) நாம் நிச்சயமாக உங்களை (முதலில்) மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்பு அலக்கிலிருந்தும் பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம் உங்களுக்கு விளக்குவதற்காகவே (இதனை விவரிக்கிறோம்): மேலும், நாம் நாடியவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருப்பப்பையில் தங்கச் செய்கிறோம் பின்பு உங்களை குழந்தையாக வெளிப்படுத்துகிறோம். பின்பு நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும்படிச் செய்கிறோம். அன்றியும், (இதனிடையில்) உங்களில் சிலர் மரிப்பவர்களும் இருக்கிறார்கள் (ஜீவித்து) அறிவு பெற்ற பின்னர் ஒன்றுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக்கூடிய தளர்ந்த வயது வரை விட்டுவைக்கப்படுபவர்களும் இருக்கிறார்கள் இன்னும், நீங்கள (தரிசாய்க் கிடக்கும்) வரண்ட பூமியைப் பார்க்கின்றீர்கள் அதன் மீது நாம் (மழை) நீரைப் பெய்யச் செய்வோமானால் அது பசுமையாகி, வளர்ந்து, அழகான (ஜோடி ஜோடியாகப்) பல்வகைப் புற்பூண்டுகளை முளைப்பிக்கிறது.



# மழை நின்று போனால்..?

இவ்வுலகம் என்ற பரீட்சைக்கூடத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மனிதன் மறந்து விடும்போது அவனுக்கு உண்மையை நினைவூட்டி அவன் இறைவன்பால் திரும்புவதற்காக இறைவன் அவ்வப்போது மழையை தடுத்து வைப்பதும் உண்டு. ஆனால் கருணையுள்ள இறைவன் விரைவிலேயே அவர்களின் நிராசையைப் போக்கியும் விடுகிறான்.

● **42:28. அவர்கள் நிராசையான பின்னர் மழையை இறக்கி வைப்பவன் அவனே மேலும் அவன் தன் அருளைப் பரப்புகிறான் இன்னும் அவனே புகழுக்குரிய பாதுகாவலன்.**

## பாவமன்னிப்பு கோரல் - மழைக்கான திறவுகோல்

*பண்டைக்காலத்தில் வாழ்ந்த ஆது என்ற கூட்டத்தாரின்பால் அனுப்பப்பட்ட ஹூத் என்ற இறைத்தூதர் தனது மக்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறியதை திருக்குர்ஆன் கூறுகிறது:*

● **11:52. “என்னுடைய சமூகத்தார்களே! நீங்கள் உங்களுடைய இறைவனிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள் இன்னும் (தவ்பா செய்து) அவன் பக்கமே மீளுங்கள் அவன் உங்கள் மீது வானத்திலிருந்து தொடராக மழையை அனுப்புவான் மேலும் உங்களுடைய வலிமையுடன் மேலும் வலிமை பெருகச் செய்வான் - இன்னும் நீங்கள் (அவனைப்) புறக்கணித்துக் குற்றவாளிகளாகி விடாதீர்கள்” (என்றும் எச்சரித்துக் கூறினார்).**

*ஹூத் நபிக்கு முன்னதாக வந்த நூஹ் நபியும் தம் மக்களுக்கு இவ்வாறே உபதேசித்து உள்ளதைக் குர்ஆனில் காண முடிகிறது:*

● **71:10-12. மேலும், “நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள் நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன்” என்றும் கூறினேன். “(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான். அன்றியும் அவன் உங்களுக்குப் பொருள்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான் இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான் உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான்.**



## நபிகளார் நடத்திய மழைத் தொழுகை

நாட்டில் பஞ்சம், வறட்சி ஏற்படும் போது அவற்றை நீக்குவதற்காக, மழை வேண்டி வல்ல இறைவனிடம் தொழுது பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதை முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தனது முன்னுதாரணம் மூலம் காட்டித் தந்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் மழைக்காக வேண்டி இரண்டு ரக்அத்கள் (சுற்றுக்கள்) தொழுவித்துள்ளார்கள். மழைத் தொழுகைக்கென சில குறிப்பிட்ட முறையையும் நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்துள்ளார்கள்.

● மக்கள் நபி (ஸல்) அவர்களிடம் மழைப் பஞ்சத்தைப் பற்றி முறையிட்டார்கள். ஒரு மிம்பரை (சிறு சொற்பொழிவு மேடை) ஏற்பாடு செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அது அவர்களுக்காக திடலில் வைக்கப்பட்டது. ஒரு நாளை மக்களுக்கு வாக்களித்தார்கள். மக்கள் அந்நாளில் (திடலை நோக்கி) புறப்பட்டார்கள். சூரியனுடைய கீற்று வெளிப்பட்ட நேரத்திலே நபியவர்கள் (வீட்டிலிருந்து திடலை நோக்கி) புறப்பட்டார்கள். மிம்பரில் உட்கார்ந்தார்கள். அல்லாஹு அக்பர் (இறைவன் பெரியவன்) என்று கூறி இறைவனைப் பெருமைப் படுத்தினார்கள். கண்ணியமிக்கவனும், கீர்த்தி மிக்கவனுமாகிய இறைவனைப் புகழ்ந்தார்கள். பிறகு, ''மக்களே! உங்கள் வீடுகளின் பஞ்சத்தைப் பற்றியும், உங்களுக்கு மழைபொழிய வேண்டும் ஆரம்ப காலத்தை விட்டும் மழை தாமதமாகி விட்டதைப் பற்றியும் நீங்கள் முறையிட்டீர்கள். நீங்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று இறைவன் உங்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றான். உங்கள் பிரார்த்தனைக்கு அவன் பதிலளிப்பதாகவும் வாக்களித்திருக்கின்றான்'' என்று கூறினார்கள்.

பின்னர் பின்வருமாறு கூறினார்கள்:

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். அர்ரஹ்மானிர் ரஹீம் மாலி(க்)கி யவ்மித்தீன். லாயிலாஹ இல்லல்லாஹு யஃப்அலு மா யுரீத். அல்லாஹும்ம அன்(த்)தல்லாஹு லாயிலாஹ இல்லா அன்(த்)தல் கனீய்யு வநஹ்னுல் ஃபு(க்)கராவு அன்ஸில் அலைனல் கைஸ வஜ்அல் மா அன்ஸல்(த்)த லனா குவ்வ(த்)தன் வபலாகன் இலா ஹீன்.

(பொருள்: எல்லாப் புகழும் இறைவனுக்கே! (அவன்) அகிலத்தைப் (படைத்துப்) பராமரிப்பவன். அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். தீர்ப்பு நாளின் அதிபதி. அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவன் நினைத்ததைச் செய்வான். இறைவா! நீயே அல்லாஹ்! உன்னைத் தவிர வேறு கடவுள் இல்லை. (நீ) எந்தத் தேவையும் அற்றவன் நாங்கள் தேவையுடையவர்கள் எங்களுக்கு மழையை பொழியச் செய்வாயாக! நீ எங்களுக்கு இறக்கியதில் வலிமையையும் குறிப்பிட்ட காலத்திற்குப் போதுமானதாகவும் ஆக்கி வைப்பாயாக!)

பிறகு தமது இரு (புறங்) கைகளையும் உயர்த்தினார்கள். தம்முடைய இரு அக்குள் பகுதியின் வெண்மை தெரியுமளவிற்கு உயர்த்தி (பிரார்த்தித்துக்) கொண்டேயிருந்தார்கள். பின்னர் மக்களை நோக்கி தமது முதுகுப் பகுதியைத் திருப்பினார்கள். தமது இரு கைகளையும் உயர்த்தியவாறே மேலாடையை மாற்றிப்போட்டார்கள்.

பிறகு மக்களை நோக்கித் திரும்பினார்கள். (மிம்பரிலிருந்து) இறங்கி (பெருநாள் தொழுகையைப் போன்று) இரண்டு ரக்அத்கள் தொழுகை நடத்தினார்கள்.

இறைவன் மேகங்களை ஒன்று கூடச் செய்தான். இடி இடித்தது. மின்னல் வெட்டியது. இறைவனின் நாட்டப்படி மழைபொழிந்தது. அவர்கள் பள்ளிக்கு வருவதற்குள் நீரோட்டமாக ஓடத்தொடங்கியது. மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் இடத்தை நோக்கி மக்கள் விரைந்து செல்வதைப் பார்த்தபோது தம்முடைய கடைவாய்ப் பற்கள் தெரியுமளவிற்கு நபியவர்கள் சிரித்தார்கள். பிறகு "இறைவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றல் பெற்றவன் என்றும், நான் இறைவனின் அடிமையும், அவன் தூதருமாவேன் என்றும் சாட்சி கூறுகிறேன்'' என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)நூல்: அபூதாவூத் *(992)*

# அண்ணல் நபிகளும் அருள்மழையும்

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களால் செய்யப்படும் பிரார்த்தனை கண்டிப்பாக இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அவரோடு வாழ்ந்த மக்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். மக்கள் பல சந்தர்பங்களில் அதைக் கண்ணாரக் கண்டும் அனுபவித்தும் இருந்தார்கள்.

அதுபோன்ற ஒரு சம்பவத்தை நபித்தோழர் அனஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

● இறைத்தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் மதீனாவாசிகளைப் பஞ்சம் பீடித்தது. (அந்தக் கால கட்டத்தில்) நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜும்ஆ (வெள்ளிக்கிழமை சிறப்புத்தொழுகை) நாளில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது ஒரு (நாட்டுப் புற) மனிதர் எழுந்து, "இறைத்தூதரே! குதிரைகள் அழிந்து விட்டன் ஆடுகளும் அழிந்து விட்டன. ஆகவே, இறைவனிடம் பிரார்த்தியுங்கள் அவன் மழை பொழியச் செய்வான்" என்று கேட்டார்.

உடனே, நபி (ஸல்) அவர்கள், தமது கையை உயர்த்திப் பிரார்த்தனை செய்தார்கள். அப்போது, வானம் (மேகங்கள் இல்லாமல்) கண்ணாடியைப் போன்றிருந்தது. (நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தவுடன்) காற்று ஒன்று வேகமாக வீசி மேகக் கூட்டத்தைத் தோற்றுவித்தது. பிறகு, அந்த மேகக் கூட்டம் ஒன்று திரண்டது. பிறகு, வானம் மழையைப் பொழிந்தது. நாங்கள் தண்ணீரில் மூழ்கியபடி (பள்ளி வாசலிலிருந்து) வெளியே வந்து எங்கள் இல்லங்களை அடைந்தோம். அடுத்த ஜும்ஆ (நாள்) வரை எங்களுக்கு மழை பொழிந்து கொண்டேயிருந்தது. ஆகவே, (மழை பெய்விக்கும்படி இறைவனிடம் பிரார்த்திக்கச் சொன்ன) அந்த மனிதர்.... அல்லது வேறொரு மனிதர்.... நபி (ஸல்) அவர்கள் முன் எழுந்து நின்று, "இறைத்தூதரே! (அடை மழையின் காரணத்தால்) வீடுகள் இடிந்து விட்டன. ஆகவே, இறைவனிடம் பிரார்த்தியுங்கள் அவன் மழையை நிறுத்தி விடுவான்" என்று சொன்னார். அதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், புன்னகை புரிந்து, "(இறைவா!) எங்களைச் சுற்றிலும் (எங்களுக்கு நன்மை ஏற்படும் விதத்தில்) மழையைப் பொழி! எங்கள் மீது (எங்களுக்குக் கேடு நேரும் விதத்தில்) மழை பொழியச் செய்யாதே!" என்று பிரார்த்தித்தார்கள். நான் மேகத்தை நோக்கினேன். அது பிளவு பட்டு மதீனாவைச் சுற்றிலும் ஒரு மாலை போல் வளையமிட்டிருந்தது.

புகாரி *(3582)*

# மழை போல வாழ்வு

தலைப்பின் படி மழை எவ்வாறு அமைகிறதோ அதைப் போன்றே மனித வாழ்வும் அமைகிறது என்பதும் உண்மையே. அந்த மழையைப் போன்றதே இந்தத் தற்காலிக வாழ்வு என்பதும் உண்மையே. இவ்வுலகைப் படைத்தவனே தன் திருமறையில் கூறும் உவமை இது. இந்த வாழ்க்கையின் உண்மை நிலையை கீழ்கண்ட வசனங்களைப் பற்றி சிந்திப்போர் உணரமுடியும்:

**● 10:24. இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம், நாம் வானத்திலிருந்து இறக்கிவைக்கும் மழை நீரைப் போன்றது் (அதன் காரணமாக) மனிதர்களும் கால்நடைகளும் உண்ணக் கூடியவைகளிலிருந்து பூமியின் பயிர்கள் பல்வேறு வகைகளாகின்றன் முடிவில் பூமி (அந்த பயிர்கள் மூலம்) தன் அலங்காரத்தை பெற்று கவர்ச்சியடைந்த பொழுது அதன் சொந்தக்காரர்கள்: (கதிரை அறுவடை செய்து கொள்ளக்கூடிய) சக்தியுடையவர்கள் என்று தங்களை எண்ணிக்கொண்டிருந்தனர் அச்சமயம் இரவிலோ பகலிலோ அதற்கு நம் கட்டளை வந்து (அதை நாம் அழித்து விட்டோம்). அது முந்திய நாள் (அவ்விடத்தில்) இல்லாதது போன்று அறுக்கப்பட்டதாக அதை ஆக்கிவிட்டோம். இவ்வாறே நாம் சிந்தனை செய்யும் மக்களுக்கு (நம்) அத்தாட்சிகளை விவரிக்கின்றோம்.**

**● 18:45,46. மேலும், இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம், அவர்களுக்கு (நபியே!) நீர் கூறுவீராக! “அது நாம் வானத்திலிருந்து இறக்கி வைத்த நீரைப் போலிருக்கிறது் பூமியிலுள்ள தாவரங்கள் அதனுடன் கலந்(து செழித்)தன் ஆனால் அவை காய்ந்து, பதராகி அவற்றைக் காற்று அடித்துக் கொண்டு போய் விடுகிறது - மேலும், எல்லாப் பொருளின் மீதும் அல்லாஹ் ஆற்றலுடையவனாக இருக்கின்றான். செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களேயாகும் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய நற்கருமங்களே உம்முடைய இறைவனிடத்தில் நன்மைப் பலனுடையவையாகவும், (அவனிடத்தில்) நம்பிக்கையுடன் ஆதரவு வைக்கத் தக்கவையாகவும் இருக்கின்றன.”**

**● 57:20. அறிந்து கொள்ளுங்கள்: “நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும் மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும் பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும் (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும் (அதாவது:) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப் படுத்துகிறது. ஆனால், சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர் பின்னர் அது கூளமாகி விடுகிறது. (உலக வாழ்வும் இத்தகையதே. எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையான வேதனையுண்டு (இறைவிசுவாசிகளுக்கு) இறைவனின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு - ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை.**

# நரகவாசி மற்றும் சொர்க்கவாசிகளின் அடையாளங்கள்

●“கடின உள்ளம் படைத்த, தடித்த உடலுடைய, பெருமையுடன் செல்லக்கூடிய, அகந்தை கொண்ட, சொத்து செல்வங்களை ஏராளமாகச் சேர்த்து, மேலும் அந்தச் செல்வங்களை யாசிப்பவர்களுக்குக் கொடுக்காமல் தடுத்து வைத்துக்கொள்ளும் ஒவ்வொருவனும் நரகவாசி. சுவனவாசி யாரெனில் பலவீனர்கள், மக்களுடன் பணிவாக நடந்து கொள்பவர்கள், மக்களால் ஒடுக்கப்படுபவர்கள் (மக்கள் அவர்களைப் பலகீனர்கள் எனக் கருதி ஒடுக்கப்படும்) ஒவ்வொருவரும் சுவர்க்கவாசி என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத், மஜ்மஉஸ்ஸவாயித்)

# கடனாளியாக மரணித்த மாமன்னர்

சமீபத்தில் *113* கோடிக்கும் அதிகமான மதிப்பு கொண்ட சொத்துக்களை தனது ஆதிக்கத்தில் வைத்திருந்து அனைத்தையும் கைவிட்டு கல்லறையை அடைந்துள்ள ஒரு ஆட்சியாளரைப் பற்றி அறிவோம். அவர் வகித்து அனுபவித்த அதே பதவியை அடைய இரவுபகலாக பாடுபட்டு வரும் இன்னும் பலரையும் நாம் அறிவோம். ஆம், ஒரு மாநிலத்தின் அல்லது நாட்டின் முழு அதிகாரமும் தன் கைக்கு வருகிறது என்றால் சும்மாவா?

ஒரு ஜனநாயக நாட்டின் நிலையே இதுவென்றால் மன்னராட்சி நடைபெறும் நாடுகளின் நிலை பற்றி கேட்கவே வேண்டாம். தான் ஆதிக்கம் பெற்ற நாட்டின் முழு வளங்களுக்கும் தான்தான் அதிபதி என்ற மனோநிலை ஆட்சிப் பொறுப்பில் வருபவர்களுக்கு வந்து விடுவதை நாம் காண்கிறோம். நாட்டு வளங்களுக்கு உண்மை அதிபதி இவ்வுலகைப் படைத்த இறைவனே. அவன் தற்காலிகமாக தந்திருப்பதே இந்த ஆட்சியதிகாரம், இதுபற்றி இறைவன் என்னை விசாரிக்க உள்ளான் என்ற பொறுப்புணர்வு இருந்தால் இவர்கள் நாட்டின் சொத்துக்களை தனதாக்கும் முயற்சியில் ஈடுபடமாட்டார்கள்.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● “உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளரும், பாதுகாவலரும் ஆவார். உங்களில் ஒவ்வொருவரும் அவரது கண்காணிப்பின், பொறுப்பின் கீழ் உள்ளவர்களைப் பற்றிக் கேட்கப்படுவார். ஆட்சியாளரும் பொறுப்பாளரே அவரிடம் அவரது குடிமக்களைப் பற்றி வினவப்படும்.... “

அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) நூல்:புகாரி, முஸ்லிம்)

தனது வாழ்நாளில் ஆன்மீகத் தலைமையும் அரசியல் தலைமையும் ஒருசேரப் பெற்றிருந்தார் நபிகள் நாயகம். அன்றைய உலகில் இருந்த வல்லரசுகளில் மகா வல்லரசின் அதிபராக இருந்த நிலையில் மரணித்த அவர்கள் அற்பமான கடனைக் கூட நிறைவேற்றாத நிலையில் மரணமடைந்தார்கள்.

● “முப்பது படி கோதுமைக்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கவச ஆடையை ஒரு யூதரிடம் அடைமானம் வைத்திருந்தார்கள். அதை மீட்காமலேயே மரணித்தார்கள்“ என்று நபிகள் நாயகத்தின் மனைவி ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார். நூல் : புகாரி *2068, 2096*

அவரது ஆட்சிக்காலத்தில் வந்தவர்களுக்கெல்லாம் அரசுக் கருவூலத்திருந்து வாரி வழங்கிய அந்த மாமன்னர் கடனாகக் கூட அரசுக் கருவூலத்திருந்து எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. தமது நாட்டின் குடிமகன் ஒருவரிடம் (யூதரிடம்) தமது கவசத்தை அடைமானமாக வைத்து முப்பது படி கோதுமையைப் பெற்றுள்ளனர் என்பதும், அந்தக் கவச ஆடையை மீட்காமலே மரணித்து விட்டார்கள் என்பதும் உலக வரலாற்றில் எந்த மன்னரும் வாழ்ந்து காட்டாத வாழ்க்கையாகும்.

**மரணிக்கும் போது நபிகளார் விட்டுச் சென்ற சொத்துக்கள்:**

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிக்கும் போது தங்கக் காசையோ, வெள்ளிக் காசையோ, அடிமைகளையோ, வேறு எதனையுமோ விட்டுச் செல்லவில்லை. தமது வெள்ளை கோவேறுக் கழுதை, தமது ஆயுதங்கள், தர்மமாக வழங்கிச் சென்ற நிலம் ஆகியவற்றைத் தான் நபிகள் நாயகம் (ஸல்) விட்டுச் சென்றார்கள். (நூல் : புகாரி *2739*)

நபிகள் நாயகம் (ஸல்) ஆட்சியில் நாட்டைக் காக்கும் இராணுவத்தினருக்கு எந்த ஊதியமும் அளிக்கப்படவில்லை. இறைவனின் திருப்தியை நோக்கமாகக் கொண்டே மக்கள் போர்களில் பங்கு கொள்வார்கள். போரில் வெற்றி கிட்டினால் தோற்று ஓடக் கூடியவர்கள் விட்டுச் செல்லும் உடமைகளும், கைது செய்யப்பட்டவர்களும், கைப்பற்றப்பட்ட நிலங்களும் போரில் பங்கு கொண்டவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். நபிகள் நாயகமும் இவ்வாறு போரில் பங்கு கொண்டதால் அவர்களுக்கும் இது போன்ற பங்குகள் கிடைத்தன. கைபர், பதக் ஆகிய பகுதிகளில் இவ்வாறு கிடைத்த நிலம் நபிகள் நாயகத்திடம் இருந்தது. அதுவும் அவர்கள் விட்டுச் சென்ற சொத்தாகும்.

பத்து ஆண்டுகள் மாமன்னராக ஆட்சி புரிந்த நபிகள் நாயகம் மரணிக்கும் போது விட்டுச் சென்ற சொத்துக்கள் இவைதாம்.

# பதவி வேண்டுமா பதவி ?

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● "மறுமையில் உலகில் நீதிபதியாக இருந்தவர் இறை விசாரணைக்கு அழைக்கப்பட்டு, கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார். அதன் கடுமை கண்டு, உலக வாழ்வில் எந்த இருவருக்கிடையிலும் நான் தீர்ப்பளிக்காமல் இருந்திருக்க வேண்டுமே என்று (கைசேதத்துடன்) கூறுவார்."

அறிவிப்பு: ஆயிஷா (ரலி) (இப்னு ஹிப்பான்)

● பதவிக்கு நீ ஆசைப்படாதே. அதை நீ கேட்டுப் பெற்றால், அதனிடமே நீ சாட்டப்படுவாய். கேளாமலேயே அது உனக்குக் கிடைத்தால், அதன் பொறுப்புகளை நிறைவேற்ற (இறைவன் மூலம்) உனக்கு உதவி செய்யப்படும். அறிவிப்பு: அப்துர்ரஹ்மான் பின் ஸமுரா (ரலி) - புகாரி, முஸ்லிம்


## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

● இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.

● மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.

● முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60-   ● ஈராண்டு சந்தா Rs.120-

● இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **09845373775 / 09886001357**

Published from:

**House of Peace,** Bangalore 560017

# செல்வசெழிப்பில் நாடு மன்னர் வீட்டில் வறுமை!

நபிகள் நாயகம் (ஸல்) ஏழ்மையாக வாழ்ந்ததற்குக் காரணம் அவர்களது ஆட்சியின் போது மதீனாவில் தரித்திரமும், பஞ்சமும் தலைவிரித்தாடியிருக்கும் என்று யாரேனும் நினைக்கக் கூடும்.

அவ்வாறு நினைத்தால் அது தவறாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா நகருக்கு வந்த முதலிரண்டு வருடங்களில் கடுமையான வறுமை தலை விரித்தாடியது உண்மைதான். ஆனால் அவர்கள் கொண்டு வந்த ஸகாத் என்னும் புரட்சிகரமான பொருளாதாரத் திட்டத்தின் மூலம் செழிப்பும், பொருளாதாரத் தன்னிறைவும் ஏற்பட்டன.

அவர்களது ஆட்சியில் ஏற்பட்டது போன்ற தன்னிறைவை அவர்களுக்குப் பின் இன்று வரை எந்த நாட்டிலும் எந்த ஆட்சியும் அடைய முடியவில்லை. ஆம் அந்த அளவுக்கு அவர்களது ஆட்சியில் செல்வம் கொழித்தது. அந்த நிலையில்தான் இவ்வளவு எளிமையான வாழ்க்கையைத் தேர்வு செய்து கொண்டார்கள்! அவர்களது செழிப்பான ஆட்சிக்குச் சில சான்றுகளைப் பாருங்கள்!

## குடிமக்களின் கடனை அடைத்த ஆட்சியாளர்!

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த ஆரம்ப காலத்தில் யாரேனும் ஒருவர் இறந்து விட்டால் அவரது உடல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்வதற்காக (ஜனாஸா தொழுகை நடத்துவதற்காக) அவர்களிடம் கொண்டு வரப்படும். "இவர் யாருக்கேனும் கடன் தர வேண்டியுள்ளதா?" என்று அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்பார்கள். ஆம் எனக் கூறப்பட்டால் "கடனை நிறைவேற்றிட எதையாவது விட்டுச் சென்றிருக்கிறாரா?" எனக் கேட்பார்கள். ஆம் என்றால் அவருக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். இல்லை எனக் கூறப்பட்டால் "உங்கள் தோழருக்காக நீங்களே பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்" என்று கூறி விடுவார்கள். அவரது கடனுக்கு யாரேனும் பொறுப்பேற்றுக் கொண்டால் அவருக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். பின்னர் அல்லாஹ் அவர்களுக்குப் பல வெற்றிகளை வழங்கிய போது "இறை நம்பிக்கையாளர்களைப் பொறுத்த வரை அவர்கள் விஷயத்தில் அவர்களை விட நானே அதிகம் பொறுப்பாளியாவேன். எனவே, யாரேனும் கடன் வாங்கிய நிலையில் மரணித்தால் அந்தக் கடனை அடைப்பது என் பொறுப்பு. யாரேனும் சொத்தை விட்டுச் சென்றால் அது அவரது வாரிசைச் சேரும்" என்று கூறலானார்கள். *நூல் : புகாரி 2297*

குடிமக்கள் வாங்காத கடனை குடிமக்கள் தலையில் கட்டுகிற அரசுகளை நாம் பார்த்துள்ளோம். ஊதாரித்தனமாகச் செலவு செய்வதற்காக பணக்கார நாடுகளிடம் கடன் வாங்கி மக்களின் வரிப்பணத்தில் வட்டி கட்டும் ஆட்சிகளையும் நாம் பார்க்கிறோம். மக்கள் வாங்கிய கடனுக்காக மக்களிடம் வட்டி வசூக்கும் ஆட்சியையும், வட்டிக் கட்டத் தவறினால் ஜப்தி செய்யும் தண்டல்கார அரசுகளையும் நாம் பார்க்கிறோம்.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சியில் ஒவ்வொரு குடிமகனும் எவ்வளவு கடன் பட்டிருந்தாலும், என்ன காரணத்துக்காகக் கடன் பட்டிருந்தாலும் அந்தக் கடன்கள் அனைத்தையும் ஆட்சித் தலைவர் என்ற முறையில் நபிகள் நாயகம் (ஸல்) அடைத்தார்கள். இவ்வாறு அடைப்பது

என்றால் அளவுக்கு அதிகமாக செல்வம் குவிந்திருந்தால் மட்டுமே சாத்தியமாகும். இன்றைக்கு மிகப் பெரிய பணக்கார நாடுகளாகக் கருதப்படும் நாடுகள் தங்கள் குடிமக்களின் கடன்களை அடைக்க முன் வந்தால் பிச்சைக்கார நாடுகளாகி விடும்.

குடிமக்கள் ஒவ்வொருவரின் கடனையும் அரசே அடைத்த அற்புத ஆட்சியை, செழிப்பு மிக்க ஆட்சியைத் தான் நபிகள் நாயகம் (ஸல்) நடத்தினார்கள்.

## தர்மத்தைப் பெற்றுக்கொள்ள ஆளில்லாத நிலை

நபிகள் நாயகத்தின் ஆட்சி எந்த அளவு செழிப்பானதாக இருந்தது என்றால் யாரேனும் இல்லை என்று கேட்டு வந்தால் மிகவும் தாராளமாக வாரி வழங்கும் அளவுக்கு செல்வச் செழிப்பு இருந்தது.

இதற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கே சுட்டிக் காட்டுவோம்.

● *நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பள்ளிவாசல் இருந்தோம். அவர்கள் எழுந்ததும் நாங்கள் எழுந்தோம். அவர்கள் பள்ளிவாசன் மையப் பகுதிக்கு வந்த போது அவர்களைக் கண்ட ஒருவர் அவர்களின் பின்புறமிருந்து மேலாடையை இழுத்தார். அவர்களின் மேலாடை முரட்டுத் துணியாக இருந்ததால் அவர்களின் பிடரி சிவந்து விட்டது. "முஹம்மதே எனது இரு ஒட்டகங்கள் நிறையப் பொருட்களைத் தருவீராக! உமது செல்வத்திருந்தோ, உமது தகப்பனாரின் செல்வத்தில் இருந்தோ நீர் தரப்போவதில்லை" என்று அந்த மனிதர் கூறினார். "இழுத்துக் கொண்டிருக்கும் என் மேலாடையை விடும் வரை பொருட்களைத் தர மாட்டேன்" என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். "நான் விட மாட்டேன்" என்று அவர் கூறினார். இவ்வாறு மூன்று முறை நபிகள் நாயகம் (ஸல்) கூறிய போது மூன்று முறையும் அவர் விட மாட்டேன்" என்றார். அந்தக் கிராமவாசியின் கூற்றை நாங்கள் செவியுற்ற போது அவரை நோக்கி விரைந்தோம். "நான் அனுமதிக்கும் வரை தமது இடத்தை விட்டு யாரும் நகரக் கூடாது" என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். பின்னர் கூட்டத்திருந்த ஒருவரை நோக்கி "இவரது ஒரு ஒட்டகத்தில் கோதுமையையும், இன்னொரு ஒட்டகத்தில் பேரீச்சம் பழத்தையும் ஏற்றி அனுப்புவீராக" என்றார்கள். பின்னர் மக்களை நோக்கி "நீங்கள் புறப்படுங்கள்!" என்றார்கள். இதை அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். நூல் : நஸயீ 4694, அபூதாவூத் 4145*

இரண்டு ஒட்டகங்களை வைத்திருப்பவர் வசதியானவராக அன்று கருதப்பட்டார். இத்தகைய வசதியுடையவரும், யாரென்று தெரியாதவருமான ஒருவர் நாகரீகமற்ற முறையில் கேட்கும் போது ஒரு ஒட்டகம் சுமக்கும் அளவுக்கு பேரீச்சம் பழத்தையும், இன்னொரு ஒட்டகம் சுமக்கும் அளவுக்கு கோதுமையையும் ஏற்றி நபிகள் நாயகம் (ஸல்) அனுப்பினார்கள் என்பது அவர்களின் ஆட்சியில் காணப்பட்ட செழிப்புக்குச் சான்றாகும்.

கேட்டவருக்கெல்லாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரசுக் கருவூலத்திருந்து வாரி வாரி வழங்கியதற்கு இன்னும் எண்ணற்ற சான்றுகள் உள்ளன.

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு சமூகத்தின் பொறுப்பாளர், அல்லது தலைவர் தன்னைச் சந்திக்க வரும் தேவையுடையோர், ஏழை எளியோர் போன்றோருக்கு தனது வாசலை சாத்தி வைத்திருந்தால், இறைவன் அவனது நெருக்கடி நேரத்தில் வானத்துக் கதவுகளை திறக்காமல் சாத்தி விடுவான். – (திர்மிதி, அஹ்மது

# ஏழையாகவே வாழ்ந்ததேனோ எங்கள் நபியே?

அகிலத்துக்கெல்லாம் அருட்கொடையாக அனுப்பப்பட்ட நபிகளாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டமும் ஆச்சரியம் மிக்கவை. அப்படிப்பட்ட ஆச்சரியங்களில் ஒன்று செல்வ செழிப்பின் போதும் அவர் வறுமை மீது கொண்ட நேசம். இவ்வுலகில் ஏழைகளாக வாழ்ந்தவர்கள் மறுமை வாழ்வில் அடைய இருக்கும் அளப்பரிய பாக்கியங்களை மி·ராஜ் என்ற விண்ணேற்ற நிகழ்வின்போது நேரடியாகக் கண்டார் நபிகளார். மட்டுமல்ல ஏழைகளின் உன்னத மறுமை நிலைபற்றிய செய்திகளை அவ்வப்போது இறைவனிடம் இருந்து கிடைக்கப்பெற்றார். அவற்றை மக்களுக்கு அறிவிக்கவும் செய்தார். நம்மில் யாருக்குத்தான் கீழ்கண்டவாறு பிரார்த்திக்க மனமோ தைரியமோ வரும்?

## நபிகளாரின் வறுமை நேசம்:

● "இறைவா, என்னை ஏழைகளின் சுபாவத்தில் வாழவைப்பாயாக! ஏழ்மையான நிலையில் உலகிலிருந்து என்னை மரணிக்கச் செய்வாயாக! ஏழைகளின் கூட்டத்தில் மறுமையில் என்னை எழுப்புவாயாக!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாக அபூஸஈது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்தத்ரக் ஹாகிம்)

## எளிமையான சொர்க்கப் பிரவேசம்:

● "இறுதித்தீர்ப்பு நாளில், நீங்கள் அனைவரும் ஒன்று கூடியிருக்கும் போது, "இந்தச் சமுதாயத்தின் ஏழை, எளியோர்கள் எங்கே?" என்று அறிவிப்புச் செய்யப்படும், (அறிவிப்பைக் கேட்டதும்) ஏழை, எளியோர்கள் எழுவார்கள்."நீங்கள் என்ன நற்காரியங்களைச் செய்தீர்கள்?" என அவர்களிடம் வினவப்படும். "எங்கள் இரட்சகனே! நீ எங்களைச் சோதித்தாய், நாங்கள் பொறுமையாக இருந்தோம். நீ மற்றவர்களுக்கு செல்வத்தையும் , ஆட்சியையும், கொடுத்தாய்!" என்று அவர்கள் கூறுவார்கள். "நீங்கள் உண்மையே கூறினீர்கள்" என்று இறைவன் கூறுவான். எனவே, மற்ற பொது மக்களுக்கு முன்னதாக அவர்கள் சுவனத்தில் நுழைவார்கள். செல்வந்தர்களிடமும், ஆட்சியாளர்களிடமும் கடினமான கேள்வி கணக்குக் கேட்கப்படும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹிப்னு அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(இப்னு ஹிப்பான்)

● "செல்வந்தர்களான முஸ்லிம்களைவிட ஏழை முஸ்லிம்கள் நாற்பது வருடங்கள் முன்னதாக சுவர்க்கத்தில் நுழைவார்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிரிப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (திர்மிதீ)

## ஏழைகளின் பொருட்டால் உதவி

● "பலவீனர்களில் என்னைத் தேடுங்கள், ஏனேனில், உங்களில் பலவீனர்களின் பொருட்டால்தான் உங்களுடைய தேவைகள் நிறைவேற்றப் படுகின்றன. உங்களுக்கு உதவி செய்யப்படுகிறது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறத் தாம் கேட்டதாக அபூதர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (அபூதாவூத்)

**ஏழைகளோடு நளின நடத்தை:**

● "மூன்று நற்பண்புகள் யாரிடம் உள்ளனவோ அவருக்கு (கியாமத் நாளன்று) இறைவன் தன் அருள் என்னும் நிழலில் இடமளிப்பான். மேலும், அவரைச் சுவர்க்கத்தில் நுழையச் செய்வான். அவை, பலவீனர்களுடன் நளினமாக நடந்து கொள்ளுதல், பெற்றோருடன் கருணை காட்டுதல், அடிமைக்கு (வேலையாட்களுக்கு) உபகாரம் செய்தல்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (திர்மிதீ)

**பணக்காரர்கள் பொறாமைப்படும் நாள்**

● "இறுதித்தீர்ப்பு நாளன்று (உயிர் தியாகம் செய்த) ஷஹீதை கொண்டு வரப்பட்டு, விசாரணைக்காக நிறுத்திவைக்கப்படும். பிறகு தானதர்மம் செய்தவரை கொண்டுவரப்பட்டு அவரையும் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படும். பிறகு உலகில் பல்வேறு சோதனைகள், சிரமங்களில் சிக்குண்டவர்கள் கொண்டு வரப்படுவர், அவர்களுக்காக மீஸான் (தராசு) வைக்கப்பட மாட்டாது, நீதிமன்றமும் அமைக்கப்படமாட்டாது. அவர்கள் மீது வெகுமதியும், கூலியும் மழையைப் போன்று பொழியப்படும், உலகில் சுகமாக வாழ்ந்தவர்கள் (இந்தச் சிறப்பான வெகுமதிகளைக் கண்டு) "தங்கள் உடல்கள் (உலகில்) கத்தரிகளால் வெட்டப்பட்டிருந்தால் அதைப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டிருந்திருப்போமே!' என ஆசைப்படுவர்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (தபரானீ, மஜ்மஉஸ்ஸவாயித்)

**சோதனைகளும் பாவமன்னிப்பும்**

● "உண்மை விசுவாசிகளான ஆண், பெண்களில் சிலர் மீது இறைவன் புறத்திலிருந்து சோதனைகளும் விபத்துகளும் வந்து கொண்டே இருக்கும். சில சமயம் உயிர் மீது, சில சமயம் பிள்ளைகள் மீது, சில சமயம் செல்வத்தின் மீதும் சோதனைகள் வந்து கொண்டே இருக்கும் அதன் காரணமாக அவருடைய பாவங்கள் உதிர்ந்து கொண்டே இருக்கும். இறுதியில் அவர் மரணித்த பிறகு ஒரு பாவம் கூட இல்லாத நிலையில் இறைவனைச் சந்திப்பார்" என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (திர்மிதீ)

# மழைக்காக நபி (ஸல்) அவர்கள் செய்த பிரார்த்தனை

● அல்லாஹும்மஸ்கினா கைஸன் முகீஸன் மரீஅன் மரீஅன் நாஃபிஅன் கைர ளார்ரின் ஆஜிலன் கைர ஆஜிலின்.

(இறைவா! தாமதமின்றி, விரைவான, இடரில்லாத, பயனளிக்கக் கூடிய, செழிப்பான, உயிரினத்திற்கு நற்பலன் தந்து காக்கும் மழையை எங்களுக்குத் தந்தருள்வாயாக!)

*அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி) நூல்: அபூதாவூத் 988*

● அல்லாஹும்மஸ்கினா, அல்லாஹும்மஸ்கினா. அல்லாஹும்மஸ்கினா

(இறைவா! எங்களுக்கு நீர் வழங்குவாயாக! இறைவா! எங்களுக்கு நீர் வழங்குவாயாக! இறைவா! எங்களுக்கு வழங்குவாயாக!)

*அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல்: புகாரீ 1013*

# அரசியல்வாதிகளுக்கு ஓர் இலட்சிய முன்மாதிரி

அரசியல் என்றாலே சாக்கடை அரசியல்வாதி என்றாலே அப்பட்டமான சந்தர்பவாதி என்ற பிம்பம் உண்டாகியுள்ள இந்த காலகட்டத்தில் தூய்மையான நேர்மையான அரசியலையும் அரசியல்வாதிகளையும் கற்பனை செய்துப்பார்ப்பது கடினமான ஒன்றே. ஆனால் அரசியல் மாசடைந்துள்ளது என்பதற்காக அதை ஒதுக்கிவைப்பது நாட்டுநலனுக்கு பெரும் கெடு விளைவிப்பது என்பது வெட்டவெளிச்சம். தகுதியற்றவர்களிடமும் கொள்ளையர்களிடமும் ஆட்சிப் பொறுப்பு சென்றடையும்போது ஏற்படும் தீய விளைவுகளைத்தான் இன்று முழுஉலகமும் அனுபவித்து வருகிறது. உலக நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதற்காகவும் ஆயுதங்களை விற்பனை செய்து நாடுகளின் செல்வங்களை சுரண்டுவதற்காகவும் வேண்டி வல்லரசுகள் இந்நாடுகளுக்கு இடையே போர்களைத் திணிக்கிறார்கள். தங்களின் கைக்கூலிகளைக் கொண்டு மக்களுக்கு இடையே இனவெறி, மொழிவெறி போன்றவற்றைத் தூண்டி உள்நாட்டுக் கலகங்களையும் நடத்திவருகின்றனர்.

## ஆட்சிப்பொறுப்பு என்ற உன்னத பதவி

ஒரு நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் வளங்களுக்கும் செல்வங்களுக்கும் என அனைத்துக்கும் மேல் ஆதிக்கம் பெறுகிறார் அதன் ஆட்சிப்பொறுப்பைப் பெறும் ஆட்சியாளர். தனக்கு மேல் யாரும் இல்லை, தன்னைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற நிலை அது. ஆனால் நாட்டின் ஆட்சிப்பொறுப்பு தவறான கைகளை சென்றடையும்போது அவர்கள் வல்லரசுகளின் கைப்பாவைகளாக விலைபோகிறார்கள். நாட்டின் சொத்துக்களை தங்களின் மற்றும் வாரிசுகளின் உடமைகளாக ஆக்கிக் கொள்கிறார்கள். இவர்களின் சுயநல நோக்கங்களுக்காக அனைத்து அடக்குமுறைகளையும் அத்துமீறல்களையும் கையாள்கிறார்கள். அதேவேளையில் இறையச்சம் - தம் செயல்பாடுகளுக்கு இறைவனிடம் பதில் கூறியாகவேண்டும் - என்ற பொறுப்புணர்வு ஆட்சியாளர்களுக்கு வந்து விட்டால் நிலைமை தலைகீழாக மாறும். உத்தம அரசியல் அங்கு உருவெடுக்கும். பூமியும் அமைதிப் பூங்காவாக மாறும்.

## அனைத்துத்துறைகளுக்கும் வழிகாட்டும் இஸ்லாம்

மனிதவாழ்வின் அனைத்து துறைகளுக்கும் இறைவன் இஸ்லாம் என்ற அவனது வாழ்வியல் நெறி மூலம் வழிகாட்டியுள்ளான். இறைவனின் இறுதித் தூதர் தன் வாழ்க்கை முன்னுதாரணம் மூலம் அதை செயல்படுத்திக் காட்டினார்கள். ஒரு சில உதாரணங்களை மட்டும் இங்கு காண்போம்:

மதீனாவில் நபிகள் நாயகத்திடம் ஆட்சித் தலைமையும் ஆன்மீகத் தலைமையும் ஒருசேர இருந்தது. அந்த வல்லரசின் தலைமைப் பீடத்தில் இருந்தபோதும் நபிகளார் எளிய வாழ்க்கையையே தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

மாமன்னர் என்ற அடிப்படையில் இல்லாவிட்டாலும் வசதியில்லாத குடிமகன் என்ற முறையில் தமது அவசியத் தேவைக்காக அரசுப் பணத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துக் கொண்டால் அவர்களது நேர்மைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அவர்கள் காட்டிய ஆன்மீக நெறிக்கும் அது முரணாக இருக்காது.

## நெருப்பாகக் கொதித்த அரசுப்பணம்

அரசுப் பணத்தில் ஊதியமாகவோ, கடனாகவோ, பரிசாகவோ, தர்மமாகவோ எந்த ஒன்றையும் பெறுவதில்லை என்பதை அவர்கள் ஒரு கொள்கையாகவே ஏற்படுத்திக் கொண்டார்கள். தாம் மட்டுமின்றி தமது மனைவி மக்களும் கூட அவ்வாறு பெறக் கூடாது என்று கொள்கை வகுத்தார்கள். இந்தக் கொள்கையை ஊரறியப் பிரகடனம் செய்தார்கள். இந்தக் கொள்கையில் கடைசி மூச்சு வரை உறுதியாக நின்றார்கள். இது தான் அவர்களின் எளிமையான வாழ்க்கைக்குக் காரணமாக இருந்தது.

இந்தக் கொள்கையில் அவர்கள் எந்த அளவு பிடிப்புடனும், உறுதியுடனும் இருந்தார்கள் என்பதற்குப் பின்வரும் நிகழ்ச்சி சான்றாக அமைந்துள்ளது.

● நபிகள் நாயகத்தின் தலைமைச் செயலகமாக இருந்த பள்ளிவாசலின் மூலையில் ஸகாத் என்னும் பொது நிதிக்குச் சொந்தமான பேரீச்சம் பழங்கள் குவிந்து கிடந்தன. ஒரு முறை நபிகள் நாயகத்தின் பேரன் ஒருவர் அவற்றிருந்து ஒரு பேரீச்சம் பழத்தை எடுத்து வாயில் போட்டு விட்டார். இதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்து விட்டார்கள். உடனே விரைந்து வந்து துப்பு துப்பு" என்று தமது பேரனிடம் கூறி, துப்பச் செய்தார்கள். அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. "நாம் ஜகாத் (பொது நிதி) பொருளைச் சாப்பிடக் கூடாது என்பது உமக்குத் தெரியாதா?" என்று பேரனிடம் கேட்டார்கள். நூல் : *புகாரி 1485, 1491*

● "தமது பேரனின் வாயிலிருந்து பேரீச்சம் பழத்தை வெளியேற்றி விட்டு "முஹம்மதின் குடும்பத்தார் ஜகாத்தைச் சாப்பிடக் கூடாது என்பதை நீ அறியவில்லையா?" எனக் கூறினார்கள் என்று கூறப்படுகிறது. நூல்: *புகாரி 1485*

"பொது நிதியிலிருந்து ஒரே ஒரு பேரீச்சம் பழத்தைக் கூட எடுக்கக் கூடாது சின்னஞ்சிறு பாலகராக இருந்தாலும் கூட தமது குடும்பத்தார் அதைச் சாப்பிடலாகாது" என்ற அளவுக்கு கொள்கையில் உறுதியாக இருந்துள்ளார்கள் என்பதை இதிலிருந்து அறியலாம்.

*மற்றொரு நிகழ்ச்சியைப் பாருங்கள்!*

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையை நடத்தி விட்டு வேகமாக வெளியேறினார்கள். சற்று நேரத்தில் பள்ளிவாசலுக்குத் திரும்பி வந்து விட்டார்கள். வழக்கத்திற்கு மாற்றமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேகமாகப் புறப்பட்டுச் சென்றதையும், உடனேயே திரும்பி வந்ததையும் நபித் தோழர்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். "நான் ஏன் அவசரமாகச் சென்றேன் தெரியுமா? அரசுக் கருவூலத்துக்குச் சொந்தமான வெள்ளிக் கட்டி என் வீட்டில் இருந்தது. அதை ஏழைகளுக்கு விநியோகம் செய்யுமாறு குடும்பத்தாரிடம் தெரிவித்து விட்டு வந்தேன்" என்றார்கள். நூல் : *புகாரி 851,*

மரணம் எந்த நேரத்திலும் ஏற்பட்டு விடலாம். ஏழைகளுக்குச் சொந்தமான வெள்ளிக் கட்டியை வீட்டில் வைத்து விட்டு மரணித்து விட்டால் குடும்பத்தினர் அதைத் தமக்குரியதாகக் கருதி விடக் கூடும். அவ்வாறு கருதி விடக் கூடாது என்று அஞ்சியே அவசரமாகப் புறப்பட்டுச் சென்று "அது பொது நிதிக்குச் சொந்தமானது" என்று கூறி விட்டுத் திரும்பியிருக்கிறார்கள்.

● "எனது படுக்கையில் ஒரு பேரீச்சம் பழம் விழுந்து கிடப்பதைக் கண்டிருக்கிறேன். அது ஜகாத் நிதியைச் சேர்ந்ததாக இருக்குமோ என்ற அச்சம் இல்லாவிட்டால் அதைச் சாப்பிட்டிருப்பேன்" எனவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். நூல் : *புகாரி 2055, 2431*

நபிகள் நாயகத்தின் வீடு பள்ளிவாசலுடன் ஒட்டி அமைந்திருந்தது. பள்ளி வாசலில் குவிக்கப்படும் ஜகாத் நிதிக்குச் சொந்தமான பேரீச்சம் பழங்களில் ஒன்றிரண்டு நபிகள் நாயகத்தின் வீட்டுக்குள் வந்து விழுந்திட வாய்ப்பு இருப்பதால் அதைக் கூட சாப்பிட மாட்டேன் என்று அறிவிக்கிறார்கள். பொது நிதியைச் சேர்ந்ததாக இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தால் கூட அதைத் தவிர்க்கும் அளவுக்கு பேணுதலாக இருந்துள்ளனர்.

## தலைமுறைகளுக்கும் தடுக்கப்பட்ட அரசுப்பணம்

இதை விடவும் உயர்வான மற்றொரு பிரகடனத்தையும் அவர்கள் வெளியிட்டார்கள்.

● "நான் ஆட்சியில் இருக்கும் போது மட்டுமல்ல. என் மரணத்திற்குப் பிறகு எந்த ஆட்சி வந்தாலும் அரசுக் கருவூலத்தின் ஜகாத் நிதியாதாரம் என் வழித் தோன்றல்களுக்குத் தடை செய்யப்படுகிறது. இந்தத் தடை உலகம் உள்ளளவும் நீடிக்கும்" என்பதே அந்தப் பிரகடனம்.

இன்றும் கூட நபிகள் நாயகத்தின் வழித் தோன்றல்களாக இருப்பவர்கள் எந்த அரசிலும் ஜகாத் நிதியைப் பெறுவதில்லை. முஸ்லிம் நாடுகளில் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதும் இல்லை. இஸ்லாமியச் சட்டப்படி நபிகள் நாயகத்தின் குடும்பத்தினர் ஜகாத் பெறுவதும், அவர்களுக்கு ஆட்சியாளர்கள் வழங்குவதும் குற்றமாகும்.

தமது வழித் தோன்றல்களாக இருப்பதால் மற்றவர்களுக்குக் கிடைக்கும் சலுகையும் கிடையாது என்று அறிவித்ததற்கு நிகரான தூய வாழ்க்கைக்குச் சொந்தக்காரரர் உலக வரலாற்றில் ஒருவரும் இல்லை.

## தொடர்புடையோருக்கும் தடை

தாமும், தமது குடும்பத்தினரும் ஜகாத் நிதியைத் தொடாதது மட்டுமின்றி தம்முடன் தொடர்புடையவர்கள் கூட அதிலிருந்து தூரமாக இருக்க வேண்டும் எனவும் அவர்கள் கட்டளை பிறப்பித்திருந்தார்கள். இதைப் பின் வரும் நிகழ்ச்சியிலிருந்து அறியலாம்.

● மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவரை ஜகாத் நிதியைத் திரட்டுவதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பினார்கள். அப்போது அபூ ராஃபிவு என்பாரும் அவருடன் செல்லலானார். அதைக் கண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "ஜகாத் எனும் பொது நிதி நமக்கு அனுமதிக்கப்பட்டதன்று. ஒரு சமுதாயத்தால் விடுதலை செய்யப்பட்டவர் அவர்களைச் சேர்ந்தவரே" என்று குறிப்பிட்டார்கள். நூல்கள் : நஸயீ 2565, அபூதாவூத் 1407

நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் அடிமைகளை வைத்திருப்பவர்கள் அடிமைகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காக நபிகள் நாயகம் (ஸல்) பல நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

"அடிமைகளை விடுதலை செய்தால் விடுதலை செய்தவரே அந்த அடிமைக்கு வாரிசு" என்பதும் அத்திட்டங்களில் ஒன்றாகும். அதாவது அந்த அடிமை மரணித்து விட்டால் அவரது சொத்துக்கள் விடுதலை செய்தவரைச் சேரும்.

இவ்வாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப் பட்டவர்தான் அபூ ராஃபிவு. இதனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு வாரிசாகும் நிலையில் இருந்தார்கள். அவரும் ஜகாத் நிதியில் எதையும் பெறக் கூடாது என்பதற்காக அவரை ஜகாத் வசூலிக்கச் செல்லக் கூடாது எனக் கட்டளை பிறப்பிக்கிறார்கள்.

# தனது சொத்துக்களையும் அரசுடமையாக்கிய ஆட்சியாளர்

அரசாங்கப் பணத்தைத் தமக்கோ, தம் குடும்பத்துக்கோ எடுத்துக் கொள்ளாமல் இருந்தது மட்டுமின்றி, உலகம் உள்ளளவும் ஒரு காலத்திலும் ஒரு அரசாங்கத்திலும் தமது வழித் தோன்றல்கள் எதையும் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று பிரகடனம் செய்தது மட்டுமின்றி மற்றொரு புரட்சிகரமான பிரகடனத்தையும் நபிகள் நாயகம் (ஸல்) வெளியிட்டார்கள்:

● எனது வாரிசுகள், தங்கக்காசுகளுக்கோ, வெள்ளிக்காசுகளுக்கோ வாரிசாக மாட்டார்கள். என் மனைவியரின் குடும்பச் செலவுக்குப் பின்பு, எனது பணியாளரின் ஊதியத்துக்குப் பின்பு நான் விட்டுச் சென்றவை பொது நிதியைச் சேரும். (எனது வாரிசுகளைச் சேராது என்று நபிகள் நாயகம் அறிவித்தார்கள்.) நூல் : புகாரி *2776, 3096*

நபிகள் நாயகத்தின் மகள் ஃபாத்திமா (ரலி) க்கு ஏற்பட்ட அனுபவம் அந்த மாமனிதரின் அப்பழுக்கற்ற தன்மையைப் பறைசாற்றும்.

நபிகள் நாயகம் (ஸல்) மரணித்த பின் அவர்களின் உற்ற தோழர் அபூபக்ர் (ரலி) ஆட்சிப் பொறுப்பேற்றார்கள். அவர்களிடம் நபிகள் நாயகத்தின் மகள் ஃபாத்திமா வந்தார். தமது தந்தை விட்டுச் சென்ற கைபர், பதக் ஆகிய பகுதிகளில் உள்ள நிலங்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அபூபக்ரிடம் கேட்டார்...

“எனக்கு யாரும் வாரிசாக முடியாது. நான் விட்டுச் சென்ற யாவும் பொது உடமையாகும்“ என்று உங்கள் தந்தை நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர். எனவே, அதை உங்களிடம் தர இயலாது. நபிகள் நாயகத்தின் மகளாகிய நீங்கள் எனது எல்லா உறவினர்களை விடவும் விருப்பமானவராக இருக்கிறீர்கள். ஆயினும், நான் தர மறுப்பதற்குக் காரணம் நபிகள் நாயகத்தின் கட்டளைதான்“ என்று கூறி மறுத்து விட்டார். நூல் : புகாரி *3093, 3094, 3712*

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளார் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தும் தமது அற்பமான சொத்துக்களையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொது உடமையாக்கினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தவுடன் அவர்களின் மனைவியர் தமக்குரிய வாரிசுரிமையை ஜனாதிபதி அபூபக்ர் (ரலி) இடம் கேட்டுப் பெறுவதற்காக உஸ்மான் (ரலி)யை அனுப்பத் திட்டமிட்டனர். அப்போது ஆயிஷா (ரலி) “எனக்கு யாரும் வாரிசாக முடியாது. நான் விட்டுச் சென்றவை பொது நிதியில் சேர்க்கப்படும் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறவில்லையா?“ என்று கேட்டு அம்முயற்சியைக் கைவிட வைத்தார். நூல் : புகாரி *6730*

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீதிபதிகள் மூன்று வகைப்படுவர். அதில் இருவர் நரகத்தில் நுழைவர். ஒருவர் சுவனத்தில் நுழைவார். வழக்கின் உண்மை நிலையை அறிந்து, தீர ஆய்வுசெய்து அதன் படி தீர்ப்பு வழங்கியவர் சுவனத்தில் நுழைவார். உண்மை நிலை அறிந்தும் அதன்படி தீர்ப்பளிக்காமல் அநீதமான முறையில் தீர்ப்பளித்தவர், உண்மை நிலை புரியாமல் அறியாமையுடனே தீர்ப்பு வழங்கியவர் இவ்விருவரும் நரகில் நுழைவர்.

(அறிவிப்பு: புரைதா (ரலி) அபூ தாவூது)

**என் கேள்விக்கென்ன பதில்?**

# தலித் மக்களும் இடமாற்றமும்

**கேள்வி:** மக்களை நேர்வழியில் கொண்டுவந்து தர்மத்தை நிலைநாட்டுவதுதான் ஒரு மதத்தின் கடமையாகும். மாறாக மக்களை மேல்சாதி, கீழ்சாதி எனப் பிரித்து ஆளுக்கொரு கொள்கை என்றால் அங்கே சகோதர பாசம் ,சமத்துவம் நிலைக்குமா? தர்மத்தை நிலைநாட்டவும் முடியாது, மக்கள் பாதுகாப்பாக வாழவும் முடியாது. அதர்மம்தான் தலைவிரித்தாடும்.

ஜாதியின் பெயரால் பாதிக்கப் பட்ட மக்கள் இருக்கும் இடத்தை விட்டு சமத்துவத்தை நோக்கி இடமாற்றம் செய்து வருகின்றனர் இதை சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டும் என்று ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர். இது அடக்குமுறைக்கு சமமாகும். அண்ணல் அம்பேத்கார் அவர்களும் அவரோடு சேர்ந்து இலட்சக்கணக்கான மக்களும் இடமாற்றம் செய்தனர். காரணம் அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்திருந்தால் இதைச் செய்திருக்க மாட்டார்கள்.

பெருவாரியாக இடமாற்றம் செய்வது கீழ் வகுப்பைச் சார்ந்தவர்கள்தான். ஆனாலும் நாங்கள் ஜாதி என்ற முள்வேலிக்குள் அனுபவிக்கும் கொடுமைகள் தொடரவே செய்கின்றன. என்னதான் தீர்வு?

– பி.ஜெயப் பிரசாத், மாரிகுப்பம். கோலார் தங்கவயல்கள்.

-------------------------------------------------------------------------------

**பதில்:** அய்யா, நம்மைக் கட்டிப்போட்டு வைத்திருக்கும் நிறம், இனம், மொழி, ஜாதி, ஊர், நாடு என்ற மாயைகளில் இருந்து விடுபட்டு நாம் அனைவரும் நம் ஆதிபிதா மற்றும் ஆதித்தாயில் இருந்து உருவான மனிதர்களே என்ற அடிப்படையையும் நம் அனைவரையும் படைத்து பரிபாலித்து வருபவனும் ஒரே ஒருவனே என்ற உண்மையையும் முன்னிறுத்தி சிந்திக்க வேண்டும். அப்போது மட்டுமே மனித இனம் அடிமைத் தனத்திலிருந்தும் அடக்குமுறைகளில் இருந்தும் விடுதலை பெறமுடியும். பூமியில் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலை நாட்ட முடியும்.

**மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**

இந்த அடிப்படையை மறந்து விட்டு மேற்படி மாயைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தோமேயானால் ஒருபோதும் விடிவு ஏற்படாது ஷைத்தான்தான் இவற்றைக் காட்டி நம்மை சத்தியத்தை ஏற்க விடாமல் தடுக்கிறான்.

நம்மைப் படைத்தவனின் பார்வையில் தொன்று தொட்டு மனித இனத்தில் இரண்டே இரண்டு பிரிவுகள்தான் உள்ளன. அவை எவை தெரியுமா?

ஒன்று சத்தியத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள் - இன்று அரபு மொழியில் இவர்களுக்கு முஸ்லிம்கள் என்று சொல்லப் படும். முஸ்லிம் என்றால் 'கட்டுப்பட்டவன்' அல்லது 'கீழ்படிபவன்' என்று பொருள். முந்தைய காலகட்டங்களில் அந்தந்த இடத்து மொழிகளில் வேறு பெயர்களால் அறியப் பட்டிருக்கலாம். (முஸ்லிம் அலலது இஸ்லாம் என்றால் ஏதேனும் நாட்டோடோ கலாசாரத்தோடோ இனத்தோடோ தொடர்பு

.
படுத்திப் பார்க்காதீர்கள்.)

மற்றது சத்தியத்தை ஏற்க மறுத்து படைத்தவனுக்கு கீழ்படிதலை அலட்சியம் செய்பவர்கள்.- இவர்களுக்கு அரபு மொழியில் கா.ஃ.பிர்கள் என்று சொல்லப் படும். கா.ஃ.பிர் என்றால் சத்தியத்தை மறுப்பவர் அல்லது மறைப்பவர் என்று பொருள்.

இதில் முதல் பிரிவு மறுமை வாழ்வில் சொர்க்கத்துக்குச் செல்லும். மற்றது நரகத்திற்கும் செல்லும். இதுதான் இறைவேதங்களும் இறைத்தூதர்களும் காலாகாலமாக கூறிவரும் ஆணித்தரமான உண்மை! அப்படியிருக்க, இந்த அணிகளில் எதில் சேர வேண்டும் என்பதை பகுத்தறிவைப் பயன்படுத்தி நாம் ஒவ்வொருவரும் தீர்மானிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இனம், நிறம், மொழி, நாடு, ஊர், குடும்பம், ஜாதி, இவற்றுக்காக நாம் சொர்க்கத்தை புறக்கணிக்கவோ நரகத்தை ஏற்கவோ முடியுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள்! இவையெல்லாம் நமக்கு இந்த தற்காலிக வாழ்க்கையில் தற்காலிகமாகத் தரப்படும் அடையாளங்கள்.

நீங்கள் இடமாற்றம் அல்லது மதமாற்றம் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றை நாடி மக்கள் இடமாற்றம் செய்வது இயல்பே. ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய ஒரு கருத்து என்னவென்றால் கொள்கை அடிப்படையில் ஆன இடமாற்றம் மட்டுமே மனிதனுக்கு நன்மை பயக்கும். அண்ணல் அம்பேத்காரைப் பின்பற்றி இடமாற்றம் செய்த தலித் மக்கள் இன்றும் இன இழிவு மாறாத நிலையிலேயே தாழ்த்தப்பட்டவர்கள் என்ற முத்திரையோடு காலம் கழித்து வருவதைத்தான் நாம் காண்கிறோம். காரணம் ஒரு உறுதியான கொள்கையின் அடிப்படையில் அந்த இடமாற்றம் நிகழவில்லை.

ஆனால் ஓரிறைக்கொள்கையை மையமாக வைத்து நிகழ்வது இடமாற்றம் அல்ல. மாறாக மனமாற்றமும் குணமாற்றமுமே. அது பற்பல புரட்சிகளை உலகில் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருவதை நாம் காண்கிறோம். இஸ்லாத்தை ஏற்பவர்கள் நிறம், இனம், மொழி, ஜாதி, ஊர், நாடு என்ற மாயைகளில் இருந்து விடுபட்டு உலகளாவிய சகோதரத்துவத்தையும் மானிட சமத்துவத்தையும் அனுபவிக்கிறார்கள். இக்கொள்கையின் முதல் குறிக்கோள் இவ்வுலக வாழ்வில் வெற்றி அடையச் செய்து மனிதனை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வதே. நீங்கள் குறிப்பிட்ட சமத்துவமும் சகோதரத்துவமும், அன்பும், அமைதியும் எல்லாம் ஓரிறைக்கொள்கை நமக்குக் கொண்டுவரும் உபரியான நன்மைகளே. (by-products).

மேலும் இக்கொள்கையை யார் வேண்டுமானாலும் எளிதில் ஏற்றுக்கொள்ளலாம் என்று இருப்பதனால் மேல்சாதியினரும் கீழ்சாதியினரும் கருப்பரும் வெள்ளையரும் பல்வேறு மொழியினரும் நாட்டவரும் ஐக்கியமாவதையும் பழைய பகை அல்லது வேற்றுமை உணர்வுகள் துடைத்தெறியப்படுவதையும் இங்கு காண முடிகிறது. இக்கொள்கை பரவப் பரவ நீங்கள் குறிப்பிட்ட முள்வேலிகள் அனைத்தும் ஒருவரையொருவர் அரவணைக்கும் மலர்மஞ்சங்களாக மாறும் காலம் தூரத்தில் இல்லை.

● **அவனே தன் தூதரை நேரான வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பியருளினான் சகல மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச் செய்வதற்காக (,தற்கு) அல்லாஹ் சாட்சியாக இருப்பதே போதுமானது. (திருக்குர்ஆன் 48:28)**

# நோன்பின் மாண்புகள்

● **நோன்பு பரிந்து பேசும்:** 'நோன்பும், அல் குர்ஆனும், மறுமையில் ஓர் அடியானுக்காக பரிந்து பேசும். நோன்பு கூறும், 'நான் இவ்வடியானை உணவை விட்டும், இச்சைகளை விட்டும் தடுத்திருந்தேன் இவன் விடயத்தில் பரிந்துரைப்பாயாக'! அல் குர்ஆன் கூறும் 'நான் இவனை இரவில் தூங்கவிடாமல் தடுத்திருந்தேன் எனவே இவனுக்கு பரிந்துரை செய்வாயாக' என நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்).

● **நோன்பை போன்ற ஓர் நற்காரியம் இல்லை:** 'நான் நபிகளார் (ஸல்) அவர்களிடம், "இறைத்தூதரே! எனக்கு இறைவனின் திருப்பொருத்தத்தைத் பெற்றுத் தரும் ஒரு காரியத்தை கட்டளையிடுவீராக" எனக் கேட்டேன். அதற்கு அன்னார் "நான் உனக்கு நோன்பை உபதேசிக்கிறேன், அதை போன்று ஒன்று இல்லை" என கூறினார்கள், என அபூ உமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நஸாஈ).

● **நோன்பின் கூலி சுவர்க்கம்:** 'நிச்சயமாக சுவர்க்கத்தில் ஒரு வாசல் இருக்கிறது, அதற்கு ரய்யான் என்று சொல்லப்படும். அவ்வாசல் வழியாக நோன்பாளிகள் மாத்திரம் நுழைவார்கள், அவர்களல்லாது வேறு யாரும் அதனால் நுழைய மாட்டார்கள், அவர்கள் நுழைந்தவுடன் அவ்வாசல் மூடப்பட்டு விடும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).

● **நரகத்தை விட்டு பாதுகாப்பு:** 'எவர் இறைப் பாதையில் ஒரு நாள் நோன்பு நோற்பாரோ இறைவன் அவரது முகத்தை நரகத்தை விட்டு எழுபது ஆண்டுகளுடைய தொலைவுக்கு தூரப்படுத்தப்படுவான்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).

● **முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்:** 'எவர் ரமலான் மாதத்தில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்ப்பார்த்தவராகவும் நோன்பு நோற்கிறாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).

● **மனோ இச்சைகளை கட்டுப்படுத்தும்:** 'வாலிபர்களே! உங்களில் திருமணம் முடிப்பதற்கு சக்தியுடையவர்கள் திருமணம் செய்து கொள்ளட்டும். நிச்சயமாக அது பார்வையை தாழ்த்தக்கூடியதாகவும், மர்மஸ்தானத்தை தவறான வழியின் பக்கம் செல்வதை விட்டுத் தடுக்கக்கூடியதாகவும் இருக்கும். எவர் திருமணம் முடிக்க சக்தி பெறவில்லையோ அவர் நோன்பு இருக்கட்டும், நிச்சயமாக அது அவரை (தவறானவைகளை) விட்டு பாதுகாக்கும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).

● **நோன்பாளிக்கு ஈருலகிலும் மகிழ்ச்சி:** 'நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் உள்ளன: ஒன்று அவன் நோன்பு திறக்கும் நேரத்தில் ஏற்படக்கூடியது, மற்றது (நாளை மறுமையில்) அவனது இறைவனை சந்திக்கும் பொழுது ஏற்படக்கூடியது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# திருக்குர்ஆனும் ரமலானும்

திருக்குர்ஆன் என்ற பேரற்புதம் மனிதகுலத்தின் நன்மையை நாடி இறைவனால் அருளப்பட்ட மாதமே ரமலான்! அதற்கு நன்றி கூறும் முகமாகவே திருமறைக் குர்ஆனின் வெளிப்பாட்டின் துவக்கத்தைக் கொண்டாடும் விதமாகவே இம்மாதம் உலகெங்கும் கண்ணியப்படுத்தப் படுகிறது. உயிரோடிருக்கும் போது இம்மாததைதை அடையும் ஒவ்வொருவர் மீதும் பகலில் விரதமிருப்பது படைத்த இறைவனால் கடமையாக்கப் பட்டுள்ளது.



● **ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும், (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது, ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும், ......,, (திருக்குர்ஆன் 2:185)**

## நோன்பும் நோக்கமும்

நோன்பு என்பது இறைவனிடத்திலுள்ள நன்மையை எதிர்பார்த்தவராக பசி, தாகம், இச்சை இவைகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட நேரம் வரை - அதாவது விடியற்காலையில் இருந்து சூரியன் மறையும் நேரம் வரை - கட்டுப்படுத்திக் கொள்வதாகும். நோன்பின் நோக்கமே இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான்.

● **விசுவாசங் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது, (அதனால்) நீங்கள் (உள்ளச்சம் பெற்று) பயபக்தியுடையவர்களாகலாம். (திருக்குர்ஆன் 2: 183)**



இறைவனுக்கு பயந்து, அவன் ஏவியவைகளை செய்தும், தடை செய்தவைகளை தவிர்த்தும் பொறுப்புணர்வோடு நடப்பதுதான் இறையச்சமாகும். அதற்கு உரிய பயிற்சியை நோன்பு கொடுக்கின்றது. பசியோடும், தாகத்தோடும் இருப்பது மாத்திரம் நோன்பாகாது. இவைகளை கட்டுப்படுத்துவது போல் மற்ற எல்லா பாவங்களையும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

● யார் கெட்ட பேச்சுக்களையும், கெட்ட செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவர் உணவை விடுவதிலும், குடிப்பை விடுவதிலும் இறைவனுக்கு எந்த தேவையும் இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: நபிமொழி நூல் புகாரி)

● எத்தனையோ நோன்பாளிகள் தனது நோன்பிலிருந்து பசியைத்தான் உணர்கிறார்களே தவிர வேறு எதையும் உணர்வதில்லை. எத்தனையோ இரவு நேரங்களில் நின்று வணங்கும் தொழுகையாளிகள் கண்விழித்தைத்தவிர வேறு எதையும் உணர்வதில்லை.( அறிவிப்பாளர்: அபுஹுரைரா (ரழி) நூல்: நஸயி, இப்னுமாஜா, ஹாகிம்.)

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To


......................................................................

......................................................................

......................................................................

......................................................................

## இஸ்லாம் ஏன் எதிர்ப்புக்குள்ளாகிறது ?




உலகில் ஒரு சதவீதமே உள்ள பணக்காரர்களிடம் மீதி 99% உள்ள மக்களிடம் உள்ள செல்வத்தைக் காட்டிலும் அதகமான செல்வம் குவிந்து கிடக்கிறது. –**Oxfam** சர்வே முடிவு